42

SELECTED PSALMS

RE-ARRANGED AS SONGS

FOR

PURE WORSHIP, HEART FELT PRAISE
TRUE ADORATION AND JOYFUL THANKSGIVING.

ALL INDIA HOLY CONVOCATION SUPPLEMENT
(Dec. 1944)

[SECOND EDITION 1000.]

பாட்டுகளாக ஒழுங்கு செய்யப்பட்ட

தெரிந்தெடுத்த
ஆராதனைக்குரிய சங்கீதங்கள்

அகில இந்திய பரிசுத்த சபை கூடுதல் அனுபந்தம்
(டிசம்பர் 1944.)

(இரண்டாம் பதிப்பு 1000.)

தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவை
களை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு
ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்
ததுமில்லை. அவைகளைக் கண்டதுமில்லை.
உன்னதங்களிலுள்ள
துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்
அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூல
மாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ......
......இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
ஏசாயா. 64: 4; எபேசி. 3: 10-11.

Published by

BAKHT SINGH

P. O. Box. 465. VEPERY, MADRAS.

விலை அணா 0-1-6.] 1944. [Price 0-1-6 Anna.

BARGAVI PRESS, VEPERY.

326

முகவுரை.

பாடல்களாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் தெரிந்தெடுத்த இச்சங்கீதங்கள் பெரும்பாலும் பஞ்சாப் ராகங்களில் போடப்பட்டிருக்கின்றன. முப்பது வருஷங்களுக்கு முன்னும் அதற்குப் பின்னும் பஞ்சாப்பில் உண்டான பெரிய மார்க்க எழுப்புதலின்போது இவைகளில் அநேகம் பஞ்சாப் ராகங்களில் போடப்பட்டு விசுவாசிகள் தேவனுடைய பூரணமான இரட்சிப்பின் வழியில் கற்பிக்கப்படவும், ஜீவனுள்ள தேவனைத் தூய்மையாகத் தொழுது கொள்ளவும், பணிவாகப் போற்றவும் அவர்களுக்கு உதவிசெய்ய தேவ ஆவியானவரால் உபயோகப்பட்டன. இதன் பலனாகப் படிப்பறியாதவர்களுங்கூட தேவனுடைய வசனத்திலுள்ள அநேக இரகசியங்களில் ஆழமாய்ப் போதிக்கப்பட்டார்கள்.

இந்தத் தமிழ் பதிப்பு, வட இந்தியா தென் இந்தியாவைச் சேர்ந்த சில தாழ்மையான ஊழியர்கள் ஒன்று கூடிச்செய்த உழைப்பின் பலனாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தலையத்துவத்தையும் அவரைத் தலையாகக்கொண்ட சரீரத்தில் பரிசுத்த ஆவியானவரே மேலானவராய் இருக்கிறார் என்பதையும் எவர்கள் அங்கீகாரம் பண்ண ஆசையாயிருக்கிறார்களோ, அவர்களிடையில் சுத்தமான ஆராதனையின் ஆவியும் பணிவான போற்றுதலின் ஆவியும் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்ற ஜெபத்துடன் இதை வெளியிடுகிறோம்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வருமளவும் அவருடைய மரணத்தை நினைவு கூறும்போது விசுவாசிகள் அவரை எவ்விதம் ஆவியோடும் உண்மையோடுந் தொழுதுகொள்ள வேண்டுமோ, அவ்விதமாய்த் தொழுதுகொள்ள அவர்களுக்குப் போதிக்கப்படாமலிருப்பதே அவருக்குரிய மகிமை அவருக்குச் செலுத்தப்படாமல் பறிமுதலாவதின் காரணங்களில் ஒன்றாகும். தேவனுடைய துதிகளை நாம் எப்படிப் பாடவேண்டுமோ அப்படி அவைகளைப் பாடவும், அவ்விதம் பாடும்போது அவருடைய நிறைவை நாம் எப்படி அடைந்துக் கொள்ளவேண்டுமோ அப்படி அடைந்துக் கொள்ளும்படியாகவும் தேவன் தாமே உதவி செய்வாராக. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து தாமே, தமது ஜீவனுள்ள வசனம் சகல ஞானத்தோடும் நமக்குள் ஐசுவரியமாய் வாசம் பண்ணும்படியாக அதன்மேல் நமக்குள்ளே பெரிய ஆசையை உண்டாக்கியருள்வாராக.

பக்த் சிங்.

தெரிந்தெடுத்த ஆராதனைக் குரிய சங்கீதங்கள்

264.1
9 JAN 1945
MADRAS

1

சங்கீதம் 150.

பல்லவி.

தேவனைத் துதியுங்கள்—எப்பொழுதும்
தேவனைத் துதியுங்கள்—ஆ ஆ ஆ ஆ

சரணங்கள்

1. அவர் வல்லமை விளங்கும் ஆகாயவிரிவை
பார்த்துத் துதித்திடுங்கள்—எப்பொழுதும்
2. அவர் வல்லமையுள்ள கிரியைகளுக்காக
அவரைத் துதித்திடுங்கள்—எப்பொழுதும்
3. மாட்சிமையான மகத்துவத்திற்காக
அவரைத் துதித்திடுங்கள்—எப்பொழுதும்
4. எக்காள தொனியுடன் அவரைத்துதியுங்கள்
வீணை சுரத்துடனே—எப்பொழுதும்
5. தம்புரு நடனத்தோடும் துதியுங்கள்
யாழும் தீங்குழலோடும்—எப்பொழுதும்
6. ஓசைக் கைத்தாளங்களோடுந் துதியுங்கள்
பேரோசைக் கைத்தாளத்தோடும்—எப்பொழுதும்
7. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா ஆமென்—எப்பொழுதும்.

2

சங்கீதம் 149.

பல்லவி.

அல்லேலூயா கர்த்தருக்குப்
புதுப்பாட்டைப் பாடுங்கள்.

Q6:4146

அனுபல்லவி.

பரிசுத்தவான்களின்
சபையிலே துதியுங்கள்.

சரணங்கள்.

1. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும்
சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவும்.

2. அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து
தம்புரு கின்னரத்தினாலுங் கீர்த்தனம் பண்ணுங்கள்

3. கர்த்தர் தமது ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்;
சாந்த குணமுள்ளவரை ரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

4. பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து,
தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரித்திடுவார்கள்.

5. ஜாதிகளைப் பழிவாங்கவும் ஜனங்களைத் தண்டிக்கவும்,
அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளால் கட்டவும்.

6. அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்கினால் கட்டவும்
எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும்.

7. அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி இருக்கும்
அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமிருக்கும்.

8. இந்த கனம் அவரின் பரிசுத்தவான்களான,
யாவருக்கும் உண்டாகும்—அல்லேலூயா ஆமென்.

3

சங்கீதம் 148.

(முதலாம் பாகம்)

1. துதியுங்கள் வானங்களில் உள்ளவைகளே
துதியுங்கள் அவரை உன்னதங்களிலே,

பல்லவி:—துதியுங்கள் துதியுங்கள்
பூமியிலுள்ளவைகளே.

2. துதியுங்கள் தூதர்களே நீங்கள் யாவரும்,
துதியுங்கள் சேனைகளே நீங்கள் யாவரும்,

3. துதியுங்கள் அவரை சூரிய சந்திரரே,
துதியுங்கள் அவரை நட்சத்திரங்களே,

4. துதியுங்கள் அவரை வானாதி வானங்களே,
துதியுங்கள் அவரை ஆகாயத் தண்ணீர்களே,

5. துதியுங்கள் அவரை மகா மச்சங்களே,
துதியுங்கள் அவரை சகல ஆழங்களே,

6. துதியுங்கள் அக்கினியே, கல்மழையே
துதியுங்கள் உறைந்த மழை, மூடுபனியே,

7. துதியுங்கள் அவர் சொற்படி செய்யுங்காற்றே,
துதியுங்கள் மலைகளே, சகல மேடுகளே,

4

சங்கீதம் 148.

(இரண்டாம் பாகம்)

8. துதியுங்கள் அவரைக் கனிமரங்களே,
துதியுங்கள் அவரைச் சகல கேதுருக்களே,

9. துதியுங்கள் அவரைக் காட்டு மிருகங்களே,
துதியுங்கள் சகல நாட்டு மிருகங்களே,

10. துதியுங்கள் அவரை ஊரும் பிராணிகளே,
துதியுங்கள் இறகுள்ள பறவைகளே நீங்கள்,

11. துதியுங்கள் பூமியின் ராஜாக்களே நீங்கள்,
துதியுங்கள் அவரைச் சகல ஜனங்களே,

12. துதியுங்கள் அவரை பிரபுக்களே நீங்கள்,
துதியுங்கள் பூமியின் நியாயாதிபதிகளே,

13. துதியுங்கள் வாலிபரே, கன்னிகைகளே,
துதியுங்கள் முதிர் வயதுள்ளவர்களே,

14. துதியுங்கள் அவரைப் பிள்ளைகளே நீங்கள்,
துதியுங்கள் அவர் நாமம் மேலானது.

5

சங்கீதம் 111.

(முதலாம் பாகம்)

பல்லவி.

துதிப்பேன் கர்த்தரைச் சபையில்
துதிப்பேன் அல்லேலூயா.

சரணங்கள்.

1. பெரியவைகளே கர்த்தரின் செய்கைகள்
பிரியப்படுவோர் ஆராய்கிறார். துதிப்

2. அவர்செயல் மகிமையும் மகத்துவமுள்ளது
அவர்நீதி என்றென்றும் நிலைக்கும். துதிப்

3. அதிசய செய்கைகளை நினைவுகூறச் செய்தார்
இரக்கமும் உருக்கமும் உள்ளவர். துதிப்

4. தமக்குப் பயந்தவருக்கு ஆகாரங் கொடுத்தார்
தமதுடன் படிக்கையை நினைப்பார். துதிப்

5. ஜாதி சுதந்திரத்தைத் தம் ஜனத்திற் கீந்ததால்
கிரியைகளின் பெலத்தைத் தெரிவித்தார். துதிப்

6

சங்கீதம் 111.

(இரண்டாம் பாகம்)

6. அவர் கரத்தின் கிரியை சத்தியமும் நியாயமுமே;
அவர் கட்டளைகள் உண்மையானவை. துதிப்

7. அவைகள் என்றென்றைக்கும் உறுதியானவைகள்
உண்மையும் செம்மையாகச் செய்தவை. துதிப்

8. அவர் தம் ஜனத்திற்கு மீட்பை அனுப்பி
உடன் படிக்கையை நித்தியமாக்கினர். துதிப்

9. அவர் நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது
அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும். துதிப்

10. கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம்
கற்பனைகளைச் செய்வோருக்கு நற்புத்தி. துதிப்

7

சங்கீதம் 100.

பல்லவி.

பாடுங்கள் பூமியின் குடிகளே
எல்லாருங் கர்த்தரைக் கெம்பீரமாகவே.

சரணங்கள்.

1. மகிழ்ச்சியோடே ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சத்தத் தோடவர் முன் வாருங்கள்.
2. கர்த்தரே தேவனென்று அறிந்திடுங்கள்
நாம் அல்ல அவரே நம்மை உண்டாக்கினார்.
3. நாம் அவர் ஜனங்களாக இருக்கிறோம்
மேய்ச்சலின் ஆடுகளாக இருக்கிறோம்.
4. அவர் வாசல்களில் துதிகளுடனே,
பிரகாரங்களில் புகழ்ச்சியுடனே.
5. பிரகாரங்களில் அவரைத் துதியுங்கள்,
பிரவேசித்தவர் நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.
6. கர்த்தர் நல்லவர் அவரைத் துதியுங்கள்,
அவர் கிருபை என்றென்றைக்கும் உள்ளது.
7. அவருடைய உண்மை தலைமுறைக்கும்
தலைமுறைக்கும் உள்ளது அல்லேலூயா.

8

சங்கீதம் 81.

(முதலாம் பாகம்)

பல்லவி.

நம் பெலனாகிய தேவனைப் பாடுங்கள்,
யாக்கோபின் தேவனை ஆர்ப்பரியுங்கள்.

அநுபல்லவி.

தம்புரு வாசித்து, வீணை எடுத்து,
சுரமண்டலத்துடன் பாடிடுங்கள்.

JAN 1944

சரணங்கள்.

1. மாதப்பிறப்பில் குறித்த காலத்தில்,
பண்டிகை நாளில், எக்காளம் ஊதுங்கள்,
இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும்,
யாக்கோபின் தேவன் விதித்த நியாயமும்.

2. நாம் அறியாத பாஷையைக் கேட்ட தேசம்
எகிப்தை விட்டுப் புறப்படுகையில்,
இதை யோசேப்பிலே சாட்சியாகவே,
ஏற்படுத்தினர் யேகோவா தேவனே.

3. அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன்,
அவன் கைகள் கூடைக்கு நீங்கினதே,
நெருக்கத்திலே என்னை நீ கூப்பிட்டாய்,
நானே உன்னைத் தப்புவித்து விட்டேனே.

4. இடிமுழக்க மறைவிலிருந்து,
உனக்கு உத்தரவு அருளினேன்,
மேரிபாவின் தண்ணீர்களிடத்திலே,
உன்னைச் சோதித்துப் பார்த்து நான் அறிந்தேன்.

5. என் ஜனமே கேள் நான் சாட்சி சொல்லுவேன்.
இஸ்ரவேல் செவிகொடுத்தால் நலமே,
உனக்குள் வேறு தேவன் இருக்க வேண்டாம்,
அந்நிய தேவனை நமஸ்கரிக்க வேண்டாம்.

9

சங்கீதம் 81
(இரண்டாம் பாகம்)

6. உன்னை எகிப்து தேசத்திலிருந்து
புறப்படப் பண்ணின தேவனான,
கர்த்தர் நானே உன்வாயை விரிவாய்த்திற,
நான் அதை அப்போது நிரப்பிடுவேன்.

7. என் ஜனமோ என் சத்தத்தைக் கேட்கவில்லை,
இஸ்ரவேல் என்னையோ விரும்பவில்லை,
அவர்கள் கடினத்திலேயே விட்டேன்,
தங்கள் யோசனைப்படி நடந்தார்கள்.

8. ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து,
இஸ்ரவேலென் வழிகளில் நடந்தால் நலம்,
நான் சீக்கிரம் எதிராளிகளைத் தாழ்த்தி,
விரோதமாகவே கை திருப்புவேன்.

9. அப்பொழுது கர்த்தரைப் பகைக்கிறவர்,
இச்சகம்பேசி அடங்கிடுவார்கள்,
அவர்கள் காலம் என்றென்றுமிருக்கும்,
கோதுமை, தேனினால் திருப்தியாக்குவேன்.

10

9 - JAN 1944

சங்கீதம் 101.

பல்லவி.

இரக்கத்தையும் நியாயத்தையுங் குறித்துப் பாடுவேன்;
கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம் பண்ணிடுவேன்.

சரணங்கள்.

1. உத்தம வழியில் விவேகமாய் நடப்பேன்;
எப்பொழுது என்னிடத்திலே வருவீர்!
உத்தம இதயத்தோடென் வீட்டில் நடப்பேன்.

2. தீங்கான காரியத்தைக் கண்முன் வைக்கமாட்டேன்;
வழிவிலகுவோரின் செய்கையை வெறுக்கிறேன்;
அது என்னை ஒருபோதுமே பற்றாது.

3. மாறுபாடான இருதயம் அகலவேணடும்;
என்னைப்பற்றுமலே அதுவிலக வேண்டும்,
சேரும் பொல்லாதவனை அறிய மாட்டேன்.

4. பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணினால்,
அவனைச் சங்கரிப்பேன் பொறுக்கவே மாட்டேன்;
மேட்டிமைக் கண்ணையும் பெருநெஞ்சனையும்.

5. தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே
வாசம் பண்ணும்படி என் கண்கள் அவரை நோக்கும்;
உத்தம வழி நடப்பவன் என்னைச் சேவிப்பான்.

6. கபடு செய்கிறவனென் வீட்டிலிருப்பதில்லை;
பொய் சொல்லுகிறவன் என் கண் முன் நிலைப்பதில்லை;
அக்கிரமக்காரர் தேவ நகரத்திலில்லை.

7. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தரின்
நகரத்தில் இராதபடி வேரறுப்புண்டு—போக
அவரை அதிகாலமே சங்கரிப்பேன்.

11

சங்கீதம் 96.

(முதலாம் பாகம்.)

பல்லவி

கர்த்தருக்குப் புதுப்பாட்டை பாடுங்கள்;
பூமியின் குடிகளே எல்லாரும்,

அநுபல்லவி

கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைப் பாடுங்கள்
பூமியின் குடிகளே எல்லாரும்.

சரணங்கள்

1. கர்த்தரைப் பாடி அவருடைய
நாமத்தையே நாம் ஸ்தோத்திரித்து,
நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பை,
சுவிசேஷமாய் அறிவியுங்கள். கர்த்

2. சகல ஜனங்களுக்குள்ளும் அவரின்
அநேக அதிசயங்களையும்;
ஜாதிகளுக்குள் அவரின் மகிமையும்
விவரித்தே சொல்லிடுங்கள். கர்த்

3. கர்த்தர் பெரியவரும் மிகவுமே,
ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவரே
எல்லா தேவர்களிலும் பயப்படத்
தக்கவர் அவரே அல்லேலூயா. கர்த்

4. சகல ஜனங்களுடைய தேவர்கள்
எல்லா விக்கிரகங்கள்தானே,
கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்,
பாடுங்கள் பூமியின் குடிகளே. கர்த்

5. கர்த்தரின் சமுகத்தில் மகிமையும்,
கனமுமே இருக்கிறது.
வல்லமையும் மகத்துவமும் அவர்
பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.

12

சங்கீதம் 96.
(இரண்டாம் பாகம்)

6. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்-
குரிய மகிமையைச் செலுத்தி,
காணிக்கைகளைக் கொண்டு வந்தே,
பிரகாரங்களில் பிரவேசியுங்கள்.
7. பரிசுத்த அலங்காரத்துடனே,
கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்.
பூலோகத்தாரே நீங்கள் யாவரும்,
அவருக்கு முன் நடுங்குங்கள்.
8. கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்,
பூச்சக்கரம் உறுதிப்பட்டிருக்கும்;
ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார்,
என்று ஜாதிகளுக்குள் சொல்லுங்கள்.
9. வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி,
சமுத்திரம் முழங்குவதாக,
நாடு யாவும் களி கூருவதாக,
அப்போது விருட்சங்கள் கெம்பீரிக்கும்.
10. பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைச்
சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.
பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்;
அவரே வருகிறார் அல்லேலூயா.

13

சங்கீதம் 72: 17—19.

1. கிறிஸ்துவின் நாமம் என்றென்றுமிருக்கும்;
சூரியனுள்ள மட்டும் நிலைத்திருக்கும்.
2. சந்தான பரம் பரையாய் நிலைக்கும்;
அவருக்குள் மனுஷர் ஆசீர் பெறுவார்.

3. எல்லா ஜாதி ஜனங்களும் அவரை,
பாக்கியமுடையவரென்று வாழ்த்துவார்கள்.
4. இஸ்ரவேலின் தேவனான கர்த்தருக்கே,
ஸ்தோத்திர முண்டாவதாக தேவனுக்கே.
5. அவரே அதிசயங்களைச் செய்கிறவர்,
அவருக்கே கனமுண்டாவதாக.
6. மகிமையான அவர் நாமத்திற்கே,
என்றென்றும் ஸ்தோத்திர முண்டாவதாக.
7. பூமி முழுவதும் அவரின் மகிமையால்,
நிறைந்திருப்பதாக ஆமென், ஆமென்.

---

14 சங்கீதம் 117.

ஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்;
ஜனங்களே எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.
அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது;
அவர் உண்மை என்றென்றைக்குமுள்ளது அல்லேலூயா.

---

15 சங்கீதம் 91.

(முதலாம் பாகம்)

பல்லவி.

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்
அவர் நிழலில் தங்குவான்.
நான் கர்த்தரை நோக்கி நீரென் அடைக்கலம்,
என் கோட்டை, என் தேவன் என்பேன்.

சரணங்கள்.

1. நான் நம்பி இருக்கிறவரென்று சொல்லுவேன்
சர்வ வல்லவரை நோக்கி,
அவர் தம் சிறகுகளால் உன்னை மூடுவார்;
செட்டைகளின் கீழ் புகுவாய்.
2. அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும்
கேடகமுமாகும்.
இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்,
பகலின் அம்புக்கும்.

3. இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
பயப்படா திருப்பாய்.
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
பயப்படா திருப்பாய்.

4. உன் பக்கத்தில் ஆயிரம் பேர் விழுந்தாலும்,
அது உன்னை அணுகாது.
உன் வலது புறம் பதினாயிரம்பேர் விழுந்-
தாலும் அணுகாது.

5. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து
துன்மார்க்கர் பலனைக் காண்பாய்.
என் அடைக்கலமான உன்னத கர்த்தரை,
தாபரமாகக் கொண்டாய்.

16

சங்கீதம் 91.

(இரண்டாம் பாகம்)

6. ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது.
வாதை உன்னை அணுகாது.
உன் வழிகளெல்லாம் உன்னைக் காக்கும்படி
தூதர்க்கிடுவார் கட்டளை.

7. உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு,
உன்னை ஏந்திக்கொண்டு போவார்
சிங்கத்தின்மேலும் விரியன்பாம்பின் மேலும்
நீ நடந்திடுவாய்.

8. பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும்,
மிதித்துப் போடுவாய்.
அவன் என்னை நோக்கியே கூப்பிடுவான்,
அவனை விடுவிப்பேன்.

9. என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறதால்,
அடைக்கலத்திலே வைப்பேன்
அவன் என்னை நோக்கியே கூப்பிடுவான்,
மறுமொழி அருளிச் செய்வேன்.

10. ஆபத்தில் நானே அவனோடிருந்து,
அவனைத் தப்புவிப்பேன்.
கனப்படுத்தி, அவனைத் திருப்தியாக்கி,
ரட்சிப்பைக் காண்பிப்பேன்.

17

சங்கீதம் 23.

பல்லவி.

கர்த்தர் எந்தன் மேய்ப்பராக இருக்கிறார்;
நானோ தாழ்ச்சியடையேனே—என்றுமே.

சரணங்கள்

1. அவர் என்னைப் புலலுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டையில் என்னை விடுகிறார். கர்த்தர்

2. அவர் என் ஆத்மாவைத் தேற்றி தம் நாமத்தினிமித்தம்
என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். கர்த்தர்

3. நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பொல்லாப்புக்குப் பயப்படேனே என்றுமே. கர்த்தர்

4. தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்
உந்தன் கோலும் தடியுமென்னையே தேற்றும். கர்த்தர்

5. என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு
ஒரு பந்தியை ஆயத்தப் படுத்தினீர். கர்த்தர்

6. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்
என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. கர்த்தர்

7. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மை கிருபை தொடரும்;
கர்த்தர் வீட்டில் நீண்ட நாட்களாய் நிலைத்திருப்பேன். கர்த்தர்

18

சங்கீதம் 32.

(முதலாம் பாகம்)

பல்லவி.

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ.
எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.

சரணங்கள்.

1. எவன் அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணமாட்டாரோ
ஆவியில் கபடமில்லாதவன் பாக்கியவான்.

2. நான் அடக்கிவைத்தமட்டும் என் எலும்புகள்,
நித்தம் என் கதறுதலினாலே உலர்ந்தது.

3. இரவும் பகலும் என்மேல் உந்தன் கை,
பாரமாயிருந்ததாலென் சாரம் போயிற்று.

4. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல்,
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்.

5. கர்த்தருக்கென் மீறுதலை அறிக்கை செய்வேன்,
தேவரீர் என் பாவதோஷத்தை மன்னித்தீர்.

6. இதற்காகச் சகாயம் கிட்டுங்காலத்தில்,
பக்தியுள்ளவன் உமக்கு விண்ணப்பஞ் செய்வான்.

7. ஜலப்பிரவாகம் அப்பொழுது வந்தாலும்,
அது அவனை அணுகவே மாட்டாது.

8. எனக்கு நீர் மறை விடமாயிருக்கிறீர்,
என்னை விலக்கிக்காரும் இக்கட்டுக்கு நீர்.

19

சங்கீதம் 32.

(இரண்டாம் பாகம்)

9. இரட்சணியப் பாடல்கள் எல்லாம் என்னை,
சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர் தேவனே.

10. நான் உனக்கு என் வழியைப் போதித்து,
நீ நடக்க வேண்டிய வழியைக் காட்டுவேன்.

11. வாரினாலும் கடிவாளத்தினாலுமே,
வாய்கட்டப்பட்டே நீ தான் இருக்கவேண்டும்.

12. புத்தியில்லாக் குதிரையைப் போலவும்,
கோவேறு கழுதையைப் போலிருக்கவேண்டாம்.

13. துர்மார்க்கனுக்கு அநேக வேதனையுண்டு,
கர்த்தரை நம்பினோனைக் கிருபை சூழும்.

14. கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறுங்கள்,
நீதிமான்களே நீங்கள் களிகூறுங்கள்.

15. செம்மையான இருதயமுள்ளவர்களே,
நீங்கள் ஆனந்த முழக்க மிடுங்களே.

20

சங்கீதம் 109 : 11-3, 23, 24.

(முதலாம் பாகம்.)

பல்லவி

கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்திருக்கிறீர்
எல்லாம் அறிகிறீர்.
உட்காருதல் எழுந்திருத்தலையும் அறிகிறீர்
நினைவையும் அறிவீர்.

சரணங்கள்

1. நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச்
சூழ்ந்து இருக்கிறீர்;
என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியவே தெரியும்
எங்கிருந்தாலுந் தெரியும்.

2. என் நாவில் சொல்பிறவாததற்கு முன்னே,
இதோ அதையும் அறிவீர்.
முற்புறமும் பிற்புறமும் நீர் என்னை நெருக்கி,
கரத்தை என்மேல் வைக்கிறீர்.

3. இந்தறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும்,
எட்டாத உயரமுமாம்.
உம் ஆவிக்கு மறைவாக எங்கே நான் போவேன்?
உம்மை விட்டெங்கே ஓடுவேன்?

4. நான் வானத்திற்கு ஏறினாலுமே நீர்,
அங்கே இருக்கிறீர்;
நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர்,
அங்கேயும் இருக்கிறீர்.

5. நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து
கடல் கடந்தாலும்,
அங்கேயும் உமது கை என்னை நடத்தும்,
வலதுகரம் பிடிக்கும்.

---

21 சங்கீதம் 139.

(இரண்டாம் பாகம்)

6. இருள் என்னை மூடிக்கொள்ளு மென்றாலும்
இரவும் வெளிச்சமாம்.
உமக்கு மறைவாக இருளும் அந்த-
காரப்படுத்தாது.

7. இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்,
உமக்கு இரண்டும் சரி.
நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டீர்;
கர்ப்பத்தில் காப்பாற்றினீர்.

8. தேவனே என்னை ஆராய்ந்து என் இதயத்தை,
அறிந்து கொள்ளுமே.
என்னைச் சோதித்து என் சிந்தனைகளை,
அறிந்து கொள்ளுமே.

9. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில்
உண்டோ என்று பார்த்து,
நித்திய வழியிலே என்னை நடத்தும்,
தேவாதி தேவனே.

---

22 சங்கீதம். 119 : 81—88.

பல்லவி.

உம்முடைய ரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது;
உம்முடைய வசனத்துக்குக் காத்துக்கொண்டு இருக்கிறேன்.

சரணங்கள்.

1. எப்பொழுது என்னைத் தேற்றுவீர்,
என்று உம்முடைய வாக்கின்மேல்;
நோக்கமாய் என்னுடைய கண்கள்,
பூத்துப் போகிறது தேவனே.

உம்

2. புகையின் துருத்திபோலானேன்,
உம் பிரமாணங்களையோ மறவேன்.
உமது அடியேனுடைய
நாட்களும் எம்மாத்திரம்?

3. என்னைத் துன்புறுத்தினோர்கட்கு நீர்,
எப்பொழுது நியாயத்தீர்ப்பு செய்வீர்.
உம் வேதத்துக்கு விரோதமாய்.
அகங்காரிகள் குழி வெட்டினர்.

4. உம்முடைய கற்பனைகளெல்லாம்
உண்மையாக இருக்கிறது,
அநியாயமாய்த் துன்புறுத்துகிறார்,
நீர் எனக்குச் சகாயம் பண்ணும்.

5. அவர்கள் என்னைப் பூமியைவிட்டு,
நீக்கிவிடச் சற்றே தப்பிற்று;
ஆனாலும் நானோ உமது
கட்டளைகளை விடவில்லை.

6. உமது கிருபையின்படியே
என்னை உயிர்ப்பியும் தேவனே;
அப்பொழுது நான் உம்முடைய,
சாட்சியைக் காத்து நடப்பேன்.

---

23 சங்கீதம் 51.

(முதலாம் பாகம்)

1. தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்,
உமது இரக்கங்களின்படி என் மீறுதலைச் சுத்திகரியும்

பல்லவி :—தேவாதி தேவனே.

2. என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவியருளும்
என் பாவமற என்னைச் சுத்திகரியும் தேவனே.

3. என் மீறுதல்களை நான் அறிந்து இருக்கிறனே,
என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

4. தேவரீர் ஒருவருக்கே விரோதமாகப்பாவஞ் செய்தேன், [தேன்.
உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்

5. நீர் பேசும்போது உம்முடைய, நீதிதான் விளங்கவும்,
நீர் நியாயந்தீர்க்கும் போது, உம் பரிசுத்தம் விளங்கவும்.

6. இதோ நான் என் துர்க்குணத்தில், உருவானேன் தேவனே;
என் தாய் என்னைப் பாவத்தில், கர்ப்பந்தரித்தாளே.

7. இதோ உள்ளத்தில் உண்மை, இருக்கவே விரும்புகிறீர்;
அந்தக் கரணத்தில் ஞானத்தை, எனக்குத் தெரியப்படுத்துவீர்.

8. நீர் என்னை ஈசோப்பினால், சுத்திகரியும் சுத்தமாவேன் [வேன்.
என்னைக் கழுவியருளும், உறைந்த மழையிலும் வெண்மையா

9. நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும், கேட்கும்படியே செய்யும்,
அப்பொழுது நீர் நொறுக்கின, எலும்புகள் களிகூறும்.

10. என் பாவங்களைப் பாராதபடி, நீர் உம் முகத்தை மறைத்து,
என் அக்கிரமங்களை யெல்லாம், நீக்கியருளும் தேவனே.

24

சங்கீதம் 51.

(இரண்டாம் பாகம்)

11. தேவனே சுத்த இருதயத்தை, என்னிலே சிருஷ்டியும்;
நிலைவரமான ஆவியை, என் உள்ளத்தில் புதுப்பியும்.

12. உமது சமுகத்தை விட்டு, என்னை நீர் தள்ளாமலும். [திரும்.
உமது பரிசுத்த ஆவியை, என்னை விட்டெடுத்துக் கொள்ளா

13. உமது இரட்சணியத்தின், சந்தோஷத்தைத் திரும்பவுந்தந்து
உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படியே செய்யும்.

14. அப்பொழுது பாதகருக்கு, உம் வழியை உபதேசிப்பேன்,
பாவிகள் உம்மிடத்திலே, மனந்திரும்புவார்களே.

15. தேவனே இரட்சிக்குந் தேவனே, இரத்தப் பழிகளுக்கே,
நீங்கலாக்கி விடும் என், நாவும் நீதியைப்பாடும்.

16. ஆண்டவரே என் உதடுகளைத் திறந்தருளும் அப்பொழுது,
என் வாய் உம்முடைய, புகழையே அறிவிக்கும்.

17. பலியை நீர் விரும்புவதில்லை, விரும்பினால் செலுத்துவேன்,
தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

18. தேவனுக் கேற்கும் பலிகள், நொறுங்குண்ட ஆவிகள் [கணியீர்.
தேவனே நொறுங்குண்ட நறுங்குண்ட, இருதயத்தை நீர்புறக்
19. சீயோனுக்கு உமது, பிரியப்படி நன்மைசெய்யும்
எருசலேமின் மதில்களை, கட்டுவீராக தேவனே.
20. அப்பொழுது தகனபலியும், சர்வாங்க தகனபலியான
நீதியின் பலிகளில் பிரியப்பட்டு, காளைகளைப் பலியிடுவார்கள்.

25

சங்கீதம் 126.

பல்லவி.

சியோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது,
சொப்பனம் காண்கிறவர்கள் போலவே யிருந்தோம்.

சரணங்கள்

1. அப்பொழுது நமது வாய் நகைப்பினாலும்,
நம் நாவு ஆனந்த சத்தத்தாலும் நிறைந்தது. சீயோ
2. கர்த்தர் இவர்களுக்குப் பெருங்காரியங்கள் செய்தார்
என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார். சீயோ
3. கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்,
இதினிமித்தமே நாம் மகிழ்ந்து இருக்கிறோம். சீயோ
4. தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல,
எங்கள் சிறையிருப்பைத் திருப்பும் கர்த்தாவே. [கள்
5. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடறுப்பார்
அழுதுபோகிறான் அள்ளித்தூவும் விதையைச் சுமப்பவன்.
6. ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு,
கெம்பீரத்தோடே திரும்பி வருவான் அல்லேலூயா. சீயோ

26

சங்கீதம் 22 : 1—10.

பல்லவி.

என் தேவனே, என் தேவனே,
ஏனோ யென்தனைக் கைவிட்டீர்?

அனுபல்லவி.

உதவி செய்யாமலும் கேளாமலும்,
ஏனோ தூரமாயிருக்கிறீர்.

சரணங்கள்.

1. என் தேவனே நான் பகலிலே
கூப்பிடுகிறேன் பதில் கொடீர்,
இரவிலே கூப்பிடுகிறேன்,
எனக்கு அமைதலில்லை.

2. இஸ்ரவேலின் துதிகளுக்குள்
வாசம் பண்ணும் தேவன் பரிசுத்தர்
எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில்
நம்பிக்கை வைக்க நீர் விடுவித்தீர்.

3. உம்மைக் கூப்பிட்டுத் தப்பினார்கள்;
வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.
நானோ புழு மனுஷனல்ல
மனுஷரால் நிந்தையடைந்தவன்.

4. என்னைப் பார்க்கிறவர்களெல்லாம்
என்னைப் பரியாசம் பண்ணி;
உதட்டைப் பிதுக்கித் தலை துலுக்கி,
கர்த்தர்மீட்டு விடட்டும் என்கிறார்.

5. கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தான்,
அவர் இவனை விடுவிக்கட்டும்.
இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே,
இப்பொழுதிவனை மீட்கட்டும்.

6. என்னைக் கர்ப்பத்திலிருந் தெடுத்தீர்;
என் தாயின் பாலை நான் உண்கையில்,
என்னை உம்முடைய பேரில்
நம்பிக்கையா யிருக்கப் பண்ணினீர்.

7. கர்ப்பத்தினின்று வெளிப்பட்டபோதே
உமது சார்பில் விழுந்தேன்
தாயின் வயிற்றிலிருந்த முதல்,
நீரென் தேவனாயிருக்கிறீர்.

27

சங்கீதம் 40 : 1—10.

பல்லவி.

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்;
என்னிடமாய்ச் சாய்ந்தென் கூப்பிடுதலைக் கேட்டார்.
பயங்கரமான குழியினிலிருந்தும்,
உளையான சேற்றிலுமிருந் தென்னை எடுத்தார்.

சரணங்கள்.

1. என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி,
அடிகளை அதன்மேல் உறுதிப்படுத்தி,
அவரைத் துதிக்கும் புதுப்பாட்டைக் கொடுத்தார்;
அநேகர் அதைக்கண்டு அவரை நம்புவார்கள்.

2. அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்தோரையும்,
நோக்காமல் கர்த்தரை நம்பினவன் பாக்கியவான்,
கர்த்தாவே நீர் எங்கள் நிமித்தம் செய்த உம்
அதிசயங்களும் யோசனைகளும் அநேகம்.

3. உமக்கதை ஒருவரும் சொல்லி முடியாது,
நான் அவைகளைச் சொல்ல எண்ணிலடங்காது;
பலியையும் காணிக்கைகளையும்,
நீர் விரும்பாமல் என் செவிகளைத் திறந்தீர்.

4. பாவ நிவாரண பலிகளையும்,
சர்வாங்க பலியையும் நீர் கேட்கவில்லை.
இதோ நான் வருகிறேன் புஸ்தகசுருளில்,
என்னைக்குறித்து எழுதி இருக்கிறது,

5. உமக்குப் பிரியமானதை செய்ய விரும்புவேன்;
உமது பிரமாணம் என் உள்ளத்தில் இருக்கும்
மகா சபையில் நீதியைப் பிரசங்கித்தேன்;
உதடுகளை மூடேன் நீர் அதை அறிவீர்.

6. உமது நீதியை நான் மறைத்துவைக்கவில்லை,
உமது சத்தியத்தையும் ரட்சிப்பையும் சொல்லுகிறேன்.
உமது கிருபையையும் உண்மையையும்
மகா சபைக்கு ஒளித்து வைக்கவில்லை.

28

சங்கீதம் 24.

பல்லவி.

பூமியும் நிறைவும் உலகமும் அதிலுள்ள
குடிகளும் கர்த்தருடையது.

சரணங்கள்.

1. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக
அஸ்திபாரப் படுத்தினர்.
அவரே அதை நதிகளுக்கு மேலாக
ஸ்தாபித்தார்.

2. யார் கர்த்தருடைய பர்வதத்தில்
ஏறுவான்?
யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
நிலைத்திருப்பான்? பூமியும்

3. கைகளில் சுத்தமுள்ளவனு மிதயத்தில்
மாசில்லாதவனும்.
மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய்
ஆணையிடாதவனே. பூமியும்

4. கர்த்தரால் ஆசீர்வாதத்தையும்
நீதியையும் பெறுவான்.
இதுவே அவர் சமுகத்தை நாடும்
யாக்கோபின் சந்ததி. பூமியும்

5. வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்
அநாதிக் கதவுகளே,
உயருங்கள் மகிமையின் ராஜா
உள்ளே பிரவேசிப்பார். பூமியும்

6. யார் இந்த மகிமையின் ராஜா?
வல்லமையுள்ள கர்த்தர்.
அவர் யுத்தத்தில் பராக்கிரமம்
உள்ளே கர்த்தராமே பூமியும்

7. வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்
அநாதிக் கதவுகளே.
உயருங்கள் மகிமையின் ராஜா
உள்ளே பிரவேசிப்பார். பூமியும்

8. யார் இந்த மகிமையின் ராஜா?
சேனையின் கர்த்தர் அவர்
அவரே மகா மகிமையின் ராஜா
அல்லேலூயா அவர்க்கே. பூமியும்

29

சங்கீதம். 108 : 1—5.

பல்லவி.

தேவனே என் இருதயம்
ஆயத்தமாயிருக்கிறது,
நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்,
என் மகிமையும் பாடும்.

சரணங்கள்

1. வீணையே சுரமண்டலமே
விழியுங்கள் காலை நான் விழிப்பேன்
கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே
உம்மையே நான் துதிப்பேன். தேவனே

2. கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே
உம்மையே நான் துதிப்பேன்.
ஜாதிகளுக்குள்ளே உம்மைக்
கீர்த்தனம் பண்ணிடுவேன். தேவனே

3. உம் கிருபை வானங்களுக்கு
மேலாக எட்டுகிறது
சத்தியம் மேக மண்டலங்கள்
பரியந்தம் எட்டுகிறது. தேவனே

4. தேவனே வானங்களுக்கு
மேலாக உயர்ந்திரும்.
உம் மகிமை பூமியனைத்தின்
மேல் உயர்ந்திருப்பதாக. தேவனே

30

சங்கீதம் 46.

பல்லவி.

தேவன் நமக்கடைக்கலமும் பெலனும்
துணையுமானவர்—ஆபத்தில்.

அநுபல்லவி.

ஆகையால் பூமி நிலைமாறினாலும்
மலைகள் சாய்ந்தாலும்—ஆபத்தில்.

சரணங்கள்.

1. பூமியின் ஜனங்கள் கொந்தளித்தாலும்
அதின் பெருக்கினால்—பயப்படோம்
பர்வதங்கள் அதிர்ந்தாலும்
நாம் பயப்படோம்—ஆபத்தில்.

2. ஒரு நதியுண்டு அதின் நீர்க்கால்கள்
தேவன் நகரத்தையும்—உன்னத
மானவர் வாசம் பண்ணும் ஸ்தலத்தையும்
சந்தோஷிப்பிக்கும்—ஆபத்தில்.

3. அதின் நடுவில் தேவன் இருக்கிறார்
அது அசையாது—தேவன்
அதிகாலையிலே அதற்கு
சகாயம் பண்ணுவார்—ஆபத்தில்.

4. தமது சத்தத்தை முழங்கப் பண்ணினார்
ஜாதிகள் கொந்தளித்தது—ராஜ்யங்கள்
தத்தளித்தது பூமியும்
உருகிப்போயிற்று—ஆபத்தில்.

5. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
யாக்கோபின் தேவன்—உயர்ந்த
அடைக்கலமான அவர் செயலை
வந்து பாருங்கள்—ஆபத்தில்

6. பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை
ஓயப்பண்ணுகிறார் தேவன்—வில்லை
ஒடித்து ஈட்டியை முறித்து—இரதங்களைச்
சுட்டெரிக்கிறார்—ஆபத்தில்.

7. நீங்கள் அமர்ந்து நானே தேவனென்றறியுங்கள்
ஜாதிகளுக்குள்ளும்—பூமியிலும்
உயர்ந்திருப்பேன் யாக்கோபின்
தேவன் நமதடைக்கலம்—ஆபத்தில்.

31

சங்கீதம் 27 : 9—14.

பல்லவி.

உமது முகத்தை எனக்கு
மறையாதேயும் கர்த்தாவே.

அநுபல்லவி.

கோபத்துடன் அடியேனை
விலக்கிப் போடாதேயும்.

சரணங்கள்

1. நீரே எனக்குச் சகாயர்;
என் இரட்சிப்பின் தேவனே,
நெகிழ விடாமலும் என்னைக்
கைவிடாமலும் இரும். உமது

2. என் தகப்பனும் என் தாயும்,
எந்தனைக் கைவிட்டாலும்,
கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்,
கடைசி மட்டுங் கைவிடார். உமது

3. கர்த்தாவே, உமது வழியை,
எனக்குப் போதித்தருளும்.
என் எதிராளிகளினிமித்தம்
செவ்வைப் பாதையில் நடத்தும். உமது

4. சத்துருக்களினிஷ்டத்திற்கு,
என்னை ஒப்புக்கொடாதேயும்;
பொய்சாட்சிகள் விரோதமாய்,
எழும்பியிருக்கிறார்கள். உமது

5. ஜீவனுள்ளோர் தேசத்தில்,
கர்த்தரின் நன்மையைக் காண்பேன்
என்று விசுவாசியாமல்
இருந்தால் கெட்டுப்போயிருப்பேன். உமது

6. கர்த்தருக்குக் காத்திரு;
இதயத்தை ஸ்திரப்படுத்துவார்
திடமனதாயிருந்து,
கர்த்தருக்கே காத்திரு. உமது

32

சங்கீதம் 103 : 1—8.

(முதலாம் பாகம்)

1. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி
என் முழு உள்ளமே அவரை ஸ்தோத்திரி

பல்லவி

அவர் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி
என் ஆத்துமாவே நீ.

2. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி
அவர் செய்த உபகாரங்களை மறவாதே.

3. அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம்
மன்னித்து நோய்களைக் குணமாக்குகிறார்.

4. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு
கிருபை இரக்கத்தால் முடி சூட்டினார்.

5. நன்மையால் வாயைத் திருப்தியாக்குகிறார்
கழுகுக்குச் சமானமாய் வயதாகிறது.

6. ஒடுக்கப்படுகிற யாவருக்கும்
கர்த்தர் நீதி நியாயத்தையும் செய்கிறார்.

7. அவர் தம் வழிகளை மோசேயுக்கும்
கிரியை இஸ்ரவேலுக்குத் தெரிவித்தார்.

8. கர்த்தர் உருக்கமு மிரக்கமுமானவர்
நீடிய சாந்தமும் கிருபையுமுள்ளவர்.

33

சங்கீதம் 67.

1. தேவனே பூமியிலே உம்முடைய வழியும்,
ஜாதிகளுக்குள்ளும் ரட்சணியமும் விளங்கப்பண்ணும்.

2. தேவரீர் எங்களுக்கு இரங்கி ஆசீர்வதித்து,
உம் முகத்தை எங்கள் மேலே பிரகாசிக்கப் பண்ணும்.

3. தேவனே ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக,
சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

4. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து,
பூமியில் உள்ள ஜாதிகளை நடத்துவீராக.

5. ஜாதிகள் சந்தோஷித்து மகிழக்கடவர்கள்,
தேவனே ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக.

6. பூமி தன் பலனைத்தரும் தேவன் ஆசீர்வதிப்பார்,
பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

34

சங்கீதம் 16 : 5—11.

பல்லவி.

துதிப்பேன் துதிப்பேன்
எனக்காலோசனை தந்த கர்த்தரை.

அநுபல்லவி.

இராக்காலங்களில் என் உள்ளிந்திரியங்கள்
என்னை உணர்த்தும். துதி

சரணங்கள்

1. கர்த்தர் என் சுதந்தரமும் பாத்திரத்தின்
பங்குமானவர் என் சுதந்தரத்தை,
என் தேவரீர் நீரே காப்பாற்றுகிறீர் துதிப்பேன். துதி

2. நேர்த்தியான இடங்களில் எனக்குப்
பங்கு கிடைத்தது ஆம் சிறப்பான
சிறப்பான சுதந்தரம் எனக்குண்டு துதிப்பேன். துதி

3. கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்
வைத்திருக்கிறேன் அவர் என் வலது
பாரிசத்தில் இருப்பதால் நான் அசைக்கப்படுவதில்லை. துதி

4. ஆகையால் என் இருதயம் பூரித்தது,
எந்தன் மகிமையுங் களிகூர்ந்தது;
எந்தனின் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். துதி

5. என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்;
உம் பரிசுத்தவானழிவைக்காண வொட்டீர்,
ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். துதி

6. உம்முடைய சமுகத்தில் பரிபூரண
ஆனந்தமும் உம்முடைய வலது
பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு துதிப்பேன். துதி

35

சங்கீதம் 92.

(முதலாம் பாகம்)

பல்லவி.

கர்த்தரைத் துதிப்பதும் உன்னதமானவரே உமது,
நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும் நலமாயிருக்கும்.

சரணங்கள்.

1. வீணையினாலும் தம்புருவினாலும்,
தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும்,
உமது நாமத்தைத் துதிப்பதும் நலமாயிருக்கும்.

2. காலையிலே உமது கிருபையையும்,
இரவிலே உமது சத்தியத்தையும்,
வாசித்து அறிவிக்கிறதுமே நலமாயிருக்கும்.

3. கர்த்தாவே உமது செய்கைகளாலே,
என்னை மகிழ்ச்சியாக்கினீரே,
உம் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.

4. கர்த்தாவே உமது கிரியைகளே,
எவ்வளவு மகத்துவமானவைகளே!
உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

5. மிருக குணமுள்ளவன் அதை அறியான்;
மூடனே அதனை உணரவே உணரான்.
நீர் என்றென்றைக்கும் உன்னதமானவராய் இருக்கிறீர்.

6. துன்மார்கர் புல்லைப்போலவே தழைத்து,
அக்கிரமக்காரர் செழிக்கும்போது,
அவர்கள் என்றென்றும் அழிவதற்கே ஏதுவாகும்.

36

சங்கீதம் 92.

(இரண்டாம் பாகம்)

7. கர்த்தாவே உம் சத்துருக்கள் அழிவார்கள்;
உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள்;
சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள்.

8. என்னுடைய கொம்பைக் காண்டாமிருகத்தின்
கொம்பைப்போலவே உயர்த்துவீரே;
புது எண்ணெயாலே அபிஷேகம் பண்ணப்படுகிறேன்.

9. என் சத்துருக்களுக்கு நேரிடுவதை
என்னுடைய கண்ணே அதைக்காணும்,
துன்மார்க்கருக்கு நேரிடுவதை என்காது கேட்கும்.

10. நீதிமான் பனையைப் போலவே செழித்து,
லீபனோனின் கேதுருவைப்போல் வளருவான்
கர்த்தரின் ஆலயத்தில் நாட்டப்பட்டோர் செழித்திருப்பார்

11. கர்த்தர் உத்தமரென்றும் அவரிடத்தில்
அநீதியில்லை யென்றும் விளங்கப்பண்ணும்படி,
முதிர்வயதிலும் கனிதந்து பசுமையாய் இருப்பார்கள்.

37

சங்கீதம் 6.

பல்லவி.

கர்த்தாவே உம்முடைய கோபத்திலென்னைக்
கடிந்து கொள்ளாதேயும்.

அனுபல்லவி.

உம்முடைய உக்கிரத்திலே என்னை நீர்
தண்டியாதேயும்.

சரணங்கள்.

1. என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே,
பெலனற்றுப் போனேன்;
என்னைக் குணமாக்கும் கர்த்தாவே,
என் எலும்புகள் நடுங்குகின்றதே.

2. என் ஆத்துமாவியாகுலப்படுகிறது,
இரங்காதிருப்பீரோ?
கர்த்தாவே திரும்பி உம் கிருபையினிமித்தம்
என்னை இரட்சியும்.

3. மரணத்தில் நினைவுகூர்ந்து பாதாளத்தில்,
உம்மைத் துதிப்பவன் யார்?
என் பெருமூச்சுகளினாலே கர்த்தாவே,
இளைத்துப் போனேன் நான்.

4. இராமுழுதுங் கண்ணீராலென் கட்டிலை ஈர-
மாக்கி நனைக்கிறேன்
துயரத்தால் கண்கள் குழிவிழுந்து
சத்துருக்களின் நிமித்தம் மங்கிற்று.

5. அக்கிரமக்காரரே எல்லாரும் என்னை
விட்டு அகன்று போங்கள்
கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்
அல்லேலூயா அவர்க்கே.

6. கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்
ஜெபத்தை ஏற்றுக்கொள்வார்
கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்
ஜெபத்தை ஏற்றுக்கொள்வார்.

7. என் பகைஞர் எல்லாரும் வெட்கிமிகவும்
கலங்கிப் போவார்கள்
அவர்கள் பின்னாகத் திரும்பிச் சடிதியில்
வெட்கப்படுவார்கள்.

38

சங்கீதம் 63.

பல்லவி.

தேவனே நீரே என் தேவன்
காலமே உம்மைத் தேடுகிறேன்.

சரணங்கள்.

1. வறண்டும் விடாய்த்ததுமான
நிலத்திலே என் ஆத்துமா,
உம்மேல் தாகமாயிருக்கிறது
என் மாம்சம் உம்மை வாஞ்சிக்கிறது. தேவனே

2. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில்
உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து,
உமது வல்லமையையும்
மகிமையையும் நான் கண்டேன். தேவனே

3. ஜீவனிலும் உம் கிருபை நல்லது
என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.
ஜீவனுள்ள மட்டுந்துதிப்பேன்,
உம் நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். தேவனே

4. நிணமும் கொழுப்பும் உண்டதுபோல்
என் ஆத்துமா திருப்தியாகும்;
வாய் ஆனந்தக்களிப்புள்ள
உதடுகளால் உம்மைத்துதிக்கும். தேவனே

5. படுக்கையின்மேல் உம்மை நினைத்து,
இராச்சாமங்களில் தியானிக்கிறேன்.
எனக்கு நீர் துணையாய் இருந்ததால்,
செட்டைகளின் கீழ் களிகூறுகிறேன். தேவனே

6. என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து
பற்றிக்கொண்டு இருக்கிறது.
உம்முடைய வலதுகரம்
என்தனைத் தாங்குகிறது. தேவனே

7. பிராணனை அழிக்கத் தேடுவோரோ
தாழ்விடங்களில் இறங்குவார்கள்.
பட்டயத்தால் விழுவார்கள்;
நரிகளுக்கிரையாவார்கள். தேவனே

8. ராஜாவோ தேவனில் களிகூறுவார்;
அவர் பேரில் சத்தியம் பண்ணுவோர்
மேன்மை பாராட்டுவார்கள்
பொய்யரின் வாய் அடைக்கப்படும். தேவனே

39 சங்கீதம் 38: 1—10.

பல்லவி.

கர்த்தாவே உமது கோபத்தில் என்னைக்
கடிந்து கொள்ளாதேயும்;

அநுபல்லவி.

உமது உக்கிரத்தில் என்னைத்
தண்டியாதேயும்.

சரணங்கள்.

1. உம்முடைய அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது;
உம்முடைய கை என்னை இருத்துகிறது தேவனே.

2. உமது கோபத்தினாலென் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை;
எனது பாவத்தால் எலும்புகளில் சவுக்கியமில்லை.

3. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று,
தாங்கக்கூடாத பாரச்சுமைபோல் பாரமாயிற்று.

4. மதிகேட்டினிமித்தம் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது;
வேதனைப் பட்டு ஒடுங்கி துக்கப் பட்டு திரிகிறேன்.

5. குடல்கள் எரிந்து மாம்சத்தில் ஆரோக்கியமில்லை,
நான் பெலனற்றுப்போய் மிகவும் நொறுக்கப்பட்டேனே.

6. இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்,
ஆண்டவரே என் எங்கலெல்லாம் உமக்குமுன் இருக்கிறது.

7. எந்தனின் தவிப்பு உமக்கு மறைவாய் இருக்கவில்லையே,
உள்ளம் குழம்பி அலைந்து பெலனும் விட்டு விலகினதே.

---

40 சங்கீதம் 55 : 16—23.

பல்லவி.

தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்;
கர்த்தர் என்னை ரட்சிப்பார்.

அந்தி சந்தி மத்தியான வேளைகளில்
தியானம் பண்ணி முறையிடுவேன்.

சரணங்கள்.

1. திரளான கூட்டமாய்க் கூடி
என்னோடே எதிர்த்தார்கள்;
எனக்கு நேரிட்ட போரை நீக்கி;
ஆத்துமாவை மீட்டுவிட்டார்.

2. ஆதி முதலாய் வீற்றிருக்கிற
தேவன் கேட்டுப் பதிலளிப்பார்;
மாறுதல் நேரிடாததினாலே,
தேவனுக்குப் பயப்படார்கள்.

3. அவன் தன்னோடே சமாதானமாய்
இருந்தோர்களுக்கு விரோதமாய்த்
தன்னுடைய கையை நீட்டி,
உடன் படிக்கையை மீறி நடந்தான்.

4. அவனுடைய வாயின் சொற்கள்
வெண்ணெயைப்போல் மெதுவானவை,
அவனுடைய இருதயமோ
யுத்தமாய் இருக்கிறது.

5. அவனுடைய வார்த்தைகளெல்லாம்
எண்ணெயிலும் மிருதுவானவை
ஆனாலும் அவைகளெல்லாம்
உருவின பட்டயங்கள்.

6. கர்த்தர்மேல் உந்தன் பாரத்தை
வைத்துவிடு அவர் ஆதரிப்பார்;
கர்த்தர் நீதிமானையோ ஒரு-
போதும் தள்ளாட வொட்டார்.

7. இரத்தப் பிரியரும் சூதுள்ள மனுஷரும்
தங்கள் ஆயுளின் நாட்களில்,
பாதிவரையிலாகிலுமே
பிழைத்திருக்க மாட்டார்கள்.

8. தேவனே நீர் அவர்களை அழிவின்
குழியில் இறங்கப்பண்ணுவீர்;
நானோ உம்மை நம்பி இருக்கிறேன்
தேவாதி தேவனே.

41

சங்கீதம் 121.

பல்லவி.

ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கே
நோக்கண்களை ஏறெடுக்கிறேன்.

சரணங்கள்.

1. வானமும் பூமியும் உண்டாக்கின
கர்த்தரிடமிருந் தொத்தாசை வரும். ஒத்தா

2. உந்தன் காலைத்தள்ளாடவே வொட்டார்;
உந்தனைக் காக்கிறவர் உறங்கார். ஒத்தா

3. இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர்
உறங்குவதும் தூங்குவது மில்லை. ஒத்தா

4. கர்த்தரே உந்தனைக் காக்கிறவர்;
வலது பக்கம் நிழலாய் இருப்பவர். ஒத்தா

5. பகலிலேதான் வெயிலாகிலும்,
இரவில் நில்வும் சேதப்படுத்தாது. ஒத்தா

6. கர்த்தர் உன்னை எல்லாத்தீங்கு கட்கும்
விலக்கி உன் ஆத்துமாவைக் காப்பார். ஒத்தா

7. கர்த்தர் உன் போக்கையும் வரத்தையும்
இது முதற் கொண்டு என்றைக்கும் காப்பார். ஒத்தா

42

சங்கீதம் 42: 1-5.

பல்லவி.

மானனது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல்
தேவனே ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

சரணங்கள்.

1. ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமா யிருக்கிறது
நான் எப்பொழுது தேவ சந்நிதியிலே வந்து நிற்பேன். [வதால்

2. உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாடோறும் சொல்லு
இரவும் பகலும் எந்தன் கண்ணீரே உணவாயிற்று.

3. முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கும் ஜனங்களோடே
தேவாலயத்திற்குப் போய்வருவேன் துதி சத்தத்தோடே

4. உள்ளம் உருகுகிறது இவைகளை நான் நினைக்கும் போது
என் ஆத்துமாவே நீ ஏன் கலங்கியுள்ளே தியங்குகிறாய்.

5. தேவனை நோக்கிக் காத்திரு ஆம் தேவனை நோக்கியே நீ
அவர் சமுகத்து ரட்சிப்பினிமித்தய் நான் துதிப்பேன்.

அட்டவணை.

பாட்டு	சங்கீதம்	பொருள் அல்லது பெயர்
1	150	சுவாசமுள்ளவைகள் கர்த்தரைத் துதித்தல்.
2	149	யெகோவாவின் குமாரர் ,, ,,
3	148	வானங்களிலுள்ளவைகள் ,, ,,
4	148	பூமியிலுள்ளவைகள் ,, ,,
5, 6	111	தேவனுடைய கிரியைகளுக்காக ,,
7	100	ஸ்தோத்திரம் செய்யுதல்
8	81	இரக்கத்தால் தேவ துதியின் அழகு
9	81	கீழ்ப்படிதலுக்காக தேவ ஆலோசனை
10	101	இரக்கங்களும் நியாயத்தீர்ப்பும்
11	96	தேவ குடும்பம் அவரைத் துதித்தல்
12	96	அவருடைய பரிசுத்த அலங்காரம்
13	72	கிறிஸ்துவின் மகிமையான நாமம்
14	117	இரக்கம் உண்மைக்காக அல்லேலூயா
15,16	91	விசுவாசிகளுக்கு தேவ செட்டை
17	23	கர்த்தர் என் மேய்ப்பர்
18,19	32	பாவங்கள் மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான்
20	139	தேவன் எங்குமிருக்கிறார்
21	139	தேவன் எல்லாம் அறிகிறார்
22	119	இரட்சிப்புக்காகப் பேராவல்
23,24	51	மனந்திரும்புதலின் பாட்டு
25	126	சிறையிருப்பின் விடுதலை
26	22	சிலுவையின் சங்கீதம்
27	40	பெரிய இரட்சிப்பு
28	24	இராஜாதி ராஜா
29	108	என் இருதய நிர்ணயம்
30	46	தேவன் நமது அடைக்கலம்
31	27	தேவனுக்காகக் காத்திருக்குதல்
32	103	பெரிய உபகாரங்களுக்காக மனமார உணர்ந்த சங்கீதம்
33	67	சகல ஜாதிகளும் அவரைத் துதிக்கக்கடவர்
34	16	கர்த்தர் என் பங்கும் என் சுதந்திரமுமானவர்
35	92	கர்த்தரைத் துதிப்பது நலம்
36	92	துன்மார்க்கரின் தீர்ப்பு நீதிமான்களின் செழிப்பு
37	6	மனந்திரும்புதலின் சங்கீதம்
38	63	தேவன் பேரிலுள்ள என் ஆத்தும தாகம்
39	38	ஓ தேவனே என்னைக் கைவிடாதேயும்
40	55	அவர் நாமத்திலுள்ள உயிர்ப்பிக்கும் வல்லமை
41	121	காக்கிறவர் கர்த்தர்
42	42	தாகமுள்ள ஆத்துமா